மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.34/2015

2024–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் (Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.20.11.2024</u>

<u>வா.சா.1</u>

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களது சொத்தில் ரோடு போட்டுள்ளதை அகற்றுவதற்கு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன். செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளது போதுமா என்றால் எனக்கு இந்த சொத்து பாத்தியமானது என்று வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து 2 இலக்கமாக காட்டப்பட்டுள்ளது என்றால் எனது கிரையப்பத்திரமான வா.சா.ஆ.1 படி காட்டியுள்ளேன். 2 இலக்கசொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 1வது இலக்க சொத்தானது சுமார் 5.5 செண்ட் ஆகும், 2வது இலக்க சொத்து 9 செண்ட் ஆகும். இந்த சொத்தானது 1968லிருந்து எப்படி அனுபவம் செய்து வருகிறீர்கள் என்றால் ஓட்டு வீடு கட்டி அடமானம் வைத்தும், வீடும், நிலமாக இருந்து வந்து குடிசை வீடு கட்டி அனுபவம் செய்து வந்தோம். அந்த சொத்தை ராஜவேலு என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான் அடமானப்பத்திரத்தை காட்டி தான் கிரையம் கொடுத்துள்ளோம். தாவா சொத்தாக காட்டியுள்ள 2 இலக்க சொத்தையும் வா.சா.ஆ.12 படி ராஜவேலுக்கு அடமானம் வைத்தேன் என்றால் சரிதான். அதன்பின்பு 11.07.2001ம் வருடம் தாவா சொத்துக்களில் 1வது இலக்க சொத்து மட்டும் ராஜவேலுக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அடமானப்பத்திரம் வா.சா.ஆ.12ல் தாவா 1வது இலக்க சொத்தின் நான்கு எல்லை யாதவர் தெருவில் காளிமுத்து கோன், சுப்பையா கோன் இவர்கள் வீட்டிற்கும் தென்வடல் முட்டுப்பாதைக்கும் கிழக்கு, கிழமேல் நெரிவு பாதைக்கும் வடக்கே, நாகுக்கோனார், இருளப்பக்கோன் நிலத்திற்கும், வீட்டிற்கும் தெற்கு, 2வது இலக்க சொத்திற்கும் மேற்கு, இதற்குள்பட்ட கிழமேல் 45 அடி, தென்வடல் 55 அடி அளவுள்ள நிலமும் அதில் அதே அளவில் கட்டப்பட்ட ஓட்டு வீடு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்தை தான் நான் ராஜவேலுவுக்கு கிரையம் கொடுத்தேன். ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த வா.சா.ஆ.13 ஆவணத்தில் நான்கு எல்லையாக

நாகுக்கோனார், இருளப்பக்கோன் இவர்கள் நிலத்திற்கும், வீட்டிற்கும் தெற்கு, கோவிந்தக்கோன் நிலத்திற்கும், வீட்டிற்கும் மேற்கு, கிழமேல் நெரிவு பாதைக்கும் வடக்கு, காளிமுத்து கோன், சுப்பையா கோன் வீட்டிற்கு தென்வடல் பாதைக்கு கிழக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் கோவிந்தக்கோன் நிலத்திற்கும், வீட்டிற்கும் மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடமான ஆவணத்தில் 2 வது இலக்க சொத்திற்கும் மேற்கு என்று தான் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், நாங்கள் கிரையம் கொடுத்த ஆவணத்தில் கோவிந்தக்கோன் நிலத்திற்கும், வீட்டிற்கும் மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் மூன்று எல்லைகள் சரியாக உள்ளது, கிழக்கு எல்லை தவறாக போடப்பட்டுள்ளது சீர்திருத்தம் போட கூப்பிட்டதற்கு அவர் வரவில்லை. 1968 ல் நாங்கள் கிரையம் வாங்கிய பத்திரத்தில் 2 இலக்க சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தாலும், ஸ்தலத்தில் 1 வது இலக்க சொத்து மட்டும இருந்துள்ளது அதனால் தான் ராஜவேல் கிரையம் வாங்கியபோது அளந்து பார்த்து இருந்ததை மட்டும கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. ராஜவேல் பூமியில் இருந்ததை அளந்து பார்த்து சரியான அளவுகள் படி தான் கிரையம் வாங்கியுள்ளார் சீத்திருத்தம் பத்திரம் போடுவதாக கூப்பிட்டது எல்லாம் பொய் என்றால் சரியல்ல. புல எண்.240/2 என்பது செட்டில்மெண்ட் காலத்தில் வண்டிப்பாதையும், வட்டக்கிணறு என வகைப்பாடு செய்யப்பட்டு தற்போது ஸ்தலத்தில் அதுதான் உள்ளது என்றால் சரியல்ல. வண்டிப்பாதையாக இருந்ததை பொதுமக்கள் சிமெண்ட் ரோடு போட சொல்லி கேட்டதால் பிவேவர் பிளாக் ரோடு போடப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டு அபுல்ஹசன் மரைக்காயர் குறைந்த ஒப்பந்தம் போட்டதால் அவருக்கு ஒதுக்கப்பட்டு அவரால் பிவேவர் பிளாக் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்பந்தம் போடப்பட்டது 1 வது இலக்க சொத்திற்கு மேற்கே வாசுகிநாதன் வீட்டின் சந்தில் தான் போடப்பட்டது தவறுதலாக எங்கள் இடத்தில் போட்டுள்ளார்கள். வாசுகிநாதன் வீட்டிற்கு போகிற சந்தானது வெறும் 250 சதுரடி தான் அதற்கு பிவேவர் பிளாக் ரோடு போடுவதற்கு ரூ.4,00,000/-க்கு ஒப்பந்தம் போடவேண்டியதில்லை, எல்லா பக்கங்களுக்கும் சேர்த்துதான் போடப்பட்டது என்றால் சரியல்ல எங்களுடைய 2 வது இலக்க சொத்திற்கும், மாரியம்மன் கோவிலுக்கு வட்டக்கிணறுக்கும் வடக்கே தான் சந்து போகிறது அதில்தான் ரோடு போடவேண்டும் எங்கள் இடத்தில் போட்டுவிட்டார்கள். 1968 லிருந்து சொத்து எங்களுக்கு பாத்தியம் என பட்டா, வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை படிப்பறிவு இல்லாததால் வாங்கவில்லை 2015, 2018 ல் மனு போட்டுள்ளோம். 1968 க்கு பின்பு 2015 வரை வருவாய் ஆவணங்கள் வாங்கவில்லை என்றால் வாங்கவில்லை. சொத்து வரி ரசீது இருக்கிறது. தாவா 1 வது இலக்க சொத்து மட்டும்தான் எங்கள் அனுபவத்தில் இருந்தது அதை நாங்கள் ராஜவேலு என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டு தற்போது ஸ்தலத்தில் இல்லாத 2 வது இலக்க சொத்தான அரசுக்கு சொந்தமான புறம்போக்கு

இடத்தை பாத்தியம் கோர எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தான 240/2 என்பது அரசு புறம்போக்கு வண்டிப்பாதை, வட்டக்கிணறு என்றால் தவறு 2 வது இலக்க சொத்திற்கு கிழக்கு பக்கம் வண்டிப்பாதை, வட்டக்கிணறு உள்ளது எங்களுக்கு சொந்தமான 9 செண்ட் சர்வே எண்.240/2 ல் உள்ளது. அதை நான் இப்போதும் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் அனுபவம் செய்து வருகிறேன். நான் சொல்வது தவறு ஆணையர் அறிக்கையில் ஸ்தலத்தை பார்த்துவிட்டு சொத்து முழுவதும் பிவேவர்பிளாக் போடப்பட்டு பாதையாக பயன்பாட்டில் உள்ளதா காட்டிவிட்டார் நாங்கள் அனுபவித்து வருவதாக பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளார் நாங்கள் கிரையம் கொடுத்த ராஜவேலுவை குறிப்பிட்டுள்ளார், குமார் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வரைபடத்தில் சொல்லப்படவில்லை ரிப்போர்டில் சொல்லப்பட்டுள்ளது. ஆணையர் வரைபடத்தில் ABCD பகுதியானது மகேஸ்வரி வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாக சொல்லியிருப்பது சரிதான். E பகுதியில் வட்டக்கிணறு என்றால் சரிதான். F பகுதியில் கன்னியம்மன் கோவில், ராக்காச்சி அம்மன் கோவில் உள்ளது என்றால் இல்லை அதற்கு நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேன். PQRS பகுதியானது சௌந்தரவல்லி வீடு என்பது சரியா என்றால் இல்லை. சௌந்தரவல்லியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. TUVRS பகுதியில் ராஜவேல் தோட்டம் உள்ளது என்பது சரிதான் அந்த இடம் நாங்கள் ராஜவேலுவுக்கு கிரையம் கொடுத்த இடம். UVWZ2Z3 பகுதி என்பது நாகுக்கோனார் வீடு என்றால் சரிதான். WHZ1Z2 என்பது கோவிந்ராஜ் வீடு என்றால் சரிதான். XYZZ1 பகுதி என்பது உலகநாதன் வீடு என்றால் சரிதான். அதில் மேற்படி ஆணையர் படத்தில் காட்டியுள்ள வீடுகளில் எங்கள் வீடு எங்கு உள்ளது என்றால் ஆணையர் அறிக்கையில் சொல்லியுள்ளார். ஆணையர் அறிக்கையில் ராஜவேலுக்கு கொடுத்த நிலத்தை தான் காட்டியுள்ளார் மீதமுள்ள இடம் எல்லாம் பிவேவர் பிளாக் போடப்பட்டதாக காட்டியுள்ளார் அதனால் நாங்கள் சொத்தை அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக அனுபவம் செய்து வருவதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1968 ல் கிரையப்பத்திரப்படி 1 வது இலக்க சொத்தை மட்டும கிரையம் வாங்கிவிட்டு 2 வது இலக்க சொத்து ஸ்தலத்தில் இல்லாமல் பத்திரத்தில் மட்டும் காட்டிவிட்டு தற்போது அரசுக்குசொந்தமான வண்டிப்பாதையாக ஆக்கிரமிப்பு செய்தவற்காக 52 வருடங்களுக்கு பின்பு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 2 வது இலக்க சொத்தானது ஆரம்ப காலம் முதல் தற்போது வரைவண்டிப்பாதையாக இருந்து வந்து பிவேர் பிளாக் போடப்பட்டுளளது என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதியை தேவையில்லாமல் சேர்த்துள்ளீர்கள் அவருடன் எந்த ஒப்பந்தமும் போடவில்லை என்றால் சரியல்ல. எந்தவித ஆவணமும் இல்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.20 18:26:36 +0530

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.20 18:26:43 +0530